Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 326

வியாழக்கிழமை
17 ஒக்ரோபர் 2024

புரட்டாதி 31 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



“அப்ப திங்கட்கிழமை ஒரு பூதம் கிளம்பப்போகுது எண்டு சொல்லுங்கோ”

# ஈஸ்டர் தாக்குதல் விடயங்களை திங்களன்று வெளிப்படுத்துவேன்



## கைது செய்வதற்கு அரசாங்கம் முயற்சி
## பகீர் கிளப்புகின்றார் உதய கம்மன்பில

**கொழும்பு, ஒக்ரோபர் 17**

**ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான இரண்டு பிரதான அறிக்கைகளையும் எதிர்வரும் திங்கட்கிழமை வெளிப்படுத்துவேன் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

11

# கசிப்புக்குகை முற்றுகை!

யாழ்., ஒக். 17

எழுதுமட்டுவாள் - காட்டுப்பகுதியில் பல வருட காலமாக இயங்கி வந்த கசிப்புக்குகையொன்று நேற்று புதன்கிழமை அதிகாலை முற்றுகையிடப்பட்ட நிலையில், பெருமளவு கோடா மீட்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி

12

# விபத்தில் முதியவர் இறப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 17

விபத்தில் காயமடைந்த முதியவர் ஒருவர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். மன்னார் - பேசாலை

11

# விவசாயத்தை மேம்படுத்த நீண்டகாலத் திட்டங்கள்!

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 17

முறையற்று இருக்கும் இலங்கையின் விவசாயத் தொழிலை ஒழுங்கமைக்கப்பட்ட நிலைக்குக் கொண்டுவருவதற்கு நீண்டகால ஒருங்கிணைந்த தேசிய வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

11

# சிவராம் படுகொலைக்கும் எமக்கும் தொடர்பு இல்லை

## புளொட் தலைவர் சித்தார்த்தன் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 17

ஊடகவியலாளர் தராகி சிவராமின் கொலைக்கும் புளொட் அமைப்புக்கும் இடையில் எந்தத் தொடர்புமில்லை என்று அந்த அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் தராகி சிவராமின் கொலை வழக்குத் தொடர்பில் உங்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படலாம் எனத் தகவல்கள் வெளிவந்துள்ளனவே? என்று வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சித்தார்த்தன் மேலும் தெரிவித்ததாவது:-

சிவராமினுடைய கொலையானது

11

தையிட்டியில் நேற்று

# திஸ்ஸ விகாரைக்கு எதிராக போராட்டம்!

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ். தையிட்டியில் அமைந்துள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக நேற்றையதினம் மீண்டும் போராட்டம் இடம்பெற்றுள்ளது.

11

# யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் 44 தரப்புகளையும் உள்ளடக்கித் தனிக்குழு!

## கொழும்பின் அறிவுறுத்தலுக்கு அமைய நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் என அனைத்துத் தரப்பினரையும் ஒருங்கிணைத்து தனியானதொரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் யாழ்ப்பாணம் பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டாரவின் தலைமையில், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் மேலதிக மாவட்டச் செயலர் சிறிமோகனின் பங்கெடுப்புடன் நேற்று நீண்டநேரம் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது வேட்பாளர்

11



சாவகச்சேரியில் திருட்டு

# திருடப்பட்ட நகைகள் பொலிஸாரால் மீட்பு!

## சந்தேகநபர்கள் ஐவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 17

சாவகச்சேரிப் பகுதியில் கடந்த பத்தாம் திகதி திருடப்பட்ட நகைகள் பொலிஸாரின் அதிரடியான நடவடிக்கைகள் மூலம் மீட்கப்பட்டுள்ளன. 25 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

11

# போலிக்கையொப்பம் வைத்து பெறுமதிமிக்க காணி மோசடி

யாழ்ப்பாணம், ஒக். 17

ஜேர்மனியில் உள்ள ஒருவரின் போலிக் கையொப்பத்தை வைத்து யாழ்ப்பாணம் நகர்ப்பகுதியில் உள்ள காணியொன்று மோசடி செய்யப்பட்டுள்ளது.

ஜேர்மனியில் உள்ளவர் நாட்டுக்கு வராத காலப்பகுதியைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியே இந்தக் காணி மோசடி இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

11

# அற்றோனித்தத்துவத்தை பயன்படுத்தி மோசடி!

## அரச ஊழியர் உட்பட இருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 17

கனடாவைச் சேர்ந்த ஒருவர் வழங்கிய அற்றோனித்தத்துவ அதிகாரத்தைப் பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குறுதி மாறினால் அரகலயவே ஏற்படும்

ஜயத் குமார தெரிவிப்பு

**கொழும்பு, ஒக். 17**

**எதிர்க்கட்சியில் இருக்கும்போது மக்களுக்கு கூறிய விடயங்களை ஆட்சிக்கு வந்துள்ள நிலையில் தேசிய மக்கள் சக்தி செய்யாவிட்டால் குறுகிய காலப்பகுதிக்குள் மீண்டும் அரகலய ஏற்படக்கூடும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஜயத் குமார தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் கூறுகையில், தேர்தல்களுக்குப் பின்னர் நாம் வன்முறைகளில் ஈடுபட்ட தரப்பினர் கிடையாது. சிறந்த முன்னுதாரணத்தை வழங்கும் வகையிலேயே அனைத்து தேர்தல் வெற்றிகளினதும் பின்னர் நாம் செயற்பட்டுள்ளோம். தற்போது மக்கள் மத்தியில் அதிக எதிர்பார்ப்பு உள்ளது. எதிர்க்கட்சியில் இருக்கும்போது தேசிய மக்கள் சக்தியினர் கூறிய விடயங்களை தற்போது ஆளுங்கட்சிக்கு வந்துள்ள நிலையில் செய்யாவிடின், மக்கள் குழப்ப மடையக்கூடும் - என்றார்.



# அரசியல்வாதிகள் ஓயமாட்டார்கள்!

மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 17

அரசியல்வாதிகள் ஒருபோதும் ஓய்வுபெறுவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அரசியலிலிருந்து நான் தற்காலிகமாகவே விலகியுள்ளேன். இது தற்காலிக நிறுத்தமே. அரசியல்வாதிகள் ஒருபோதும் ஓய்வுபெறுவதில்லை.

2024 பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுன இலகுவான வெற்றியைப் பெறும். அனைத்து ராஜபக்சாக்களும் தேர்தலில் போட்டியிடுவதை தவிர்க்கவில்லை. சசீந்திர ராஜபக்ச மொனராகல மாவட்டத்தில் போட்டியிடுகின்றார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# தெற்கின் அலையில் தமிழர்கள் சிக்காதீர்

**வேட்பாளர் மயூரன் தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், ஒக். 17

தெற்கின் மாற்றம் என்ற வரையறைக்குள் தமிழ்மக்களின் தேவைகளை அடகுவைக்காமல் தமிழ்த்தேசிய இனத்தின் இருப்பை மனதில் நிறுத்தி வாக்களிக்கவேண்டும் என்று வடக்குமாகாணசபை முன்னாள் உறுப்பினரும் ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வன்னிமாவட்ட வேட்பாளருமான செந்தில்நாதன் மயூரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு பொருளாதார சிக்கல்களுக்கு முகம் கொடுத்து ஊழல் வாதிகளால் சூறையாடப்பட்டுள்ளது. நாட்டில் ஒரு புதியயுகத்தினை ஏற்படுத்துவதற்காக சிங்கள மக்கள் ஒன்றிணைந்துள்ளனர். அதனை நாம் வரவேற்கின்றோம். அதற்கான பங்களிப்புகளை வழங்குவதற்கு நாங்களும் தயாராக இருக்கிறோம்.

அதேவேளை தெற்கு மக்களின் மாற்றமும் வடக்கு - கிழக்கு தமிழ்மக்களின் எதிர்பார்ப்புக்களும் ஒன்றல்ல. இரண்டையும் நாம் ஒரே கண்ணோட்டத்தில் பார்க்கமுடியாது. வடக்கு கிழக்கு தமிழ்ப்பகுதிகளில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இனப்பரம்பல் செயற்பாடுகள் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே தெற்கில் ஏற்பட்ட மாற்றத்திற்கான அலையில் தமிழ் மக்கள் சிக்கிவிடாது தமிழ்ப்பிரதேசங்களின் இருப்புகளையும், பிரதிநிதித்துவத்தையும் பாதுகாக்கவேண்டிய அவசியத்தை உணரவேண்டும் என்றார். (ச-110)

# அரசியல்வாதிகளின் பாதுகாப்பு உறுதி

அரசாங்கம் 'பல்டி'

கொழும்பு, ஒக். 17

எதிர்வரும் தேர்தலின் பின்னர் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கத்தின் புதிய அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

அதன் பிரகாரம் இனி வரும் காலங்களில் அமைச்சர்களுக்கு 4 மெய்ப்பாதுகாவலர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இரண்டு மெய்ப்பாதுகாவலர்களும் வழங்கப்படவுள்ளனர் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளவர்களுக்கு மாத்திரம் இந்த எண்ணிக்கையில் மாற்றம் செய்யப்படும் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதேவேளை கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அரசியல்வாதிகளுக்கு பாதுகாப்பு வழங்கப்படமாட்டாது என்று தேசிய மக்கள் சக்தி அறிவித்திருந்த நிலையில், தற்போது அதன் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# வர்த்தக மாபியாக்கள் மீது அரசாங்கம் வேட்டை

கொழும்பு, ஒக். 17

நாட்டில் பெரும் வர்த்தகர்கள் பலரும் கோடிக்கணக்கில் அரசாங்கத்துக்கு வரி செலுத்தாமலிருக்கின்றனர். விரைவில் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர் என்று அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கோடிக்கணக்கில் அரசாங்கத்துக்கு வரி செலுத்தாமலிருக்கின்றவர்களில் ஒருவரே அர்ஜுன அலோசியஸ். அவர் 355 கோடி ரூபா வரி செலுத்தாமல் தவிர்த்திருக்கின்றார்.

தேசிய வருமான வரித் திணைக்களத்தால் இந்த வழக்குத் தொடரப்பட்டது. அதற்கமைய அவருக்கு 6 மாத கால சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

இந்த விவகாரத்தில் நபர்கள் தொடர்பான தராதரம் இன்றி நடவடிக்கை எடுப்பதிலிருந்து பின்வாங்கப் போவதில்லை. அது முறையான வழிமுறைக்கமைய முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



# நடவடிக்கைகள் திருப்தியில்லை

*இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு*

கொழும்பு, ஒக். 17

பரீட்சை மோசடியில் ஈடுபட்டதாக குற்றஞ் சுமத்தப்பட்டுள்ள 473 பேருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் திருப்தியடைய முடியாது என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவிக்கையில்,

தேர்வில் முறைகேடு செய்பவர்களுக்கு ஒரே தண்டனை தேர்வுக்கு தடை விதிப்பதுதான். தண்டனைகளை நிர்ணயிக்கும் அதிகாரங்களை மாகாணக் கல்விப் பணிப்பாளர் வழங்கியுள்ள போதிலும், சில குற்றச்சாட்டுகளுக்கு தண்டனைகள் மற்றும் விசாரணைகள் மேற்கொள்ளப்படாத நிலை காணப்படுகிறது - என்றார். (ச-இ)

# அரச பங்களாக்களை உடன் கையளியுங்கள்

அரசாங்கம் காலக்கெடு

கொழும்பு, ஒக். 17

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் அரச வீடுகளை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்காவிட்டால் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை பாயும் என்று அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் நீதி, பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் தொழிலாளர் அமைச்சின் செயலாளர் நேற்றுமுன்தினம் கடிதம் அனுப்பியுள்ளார்.

முன்னாள் அமைச்சர்களுக்கு அரசாங்க வீடுகளை வழங்குவதில் பின்னடித்து வருகின்றனர்.

கொழும்பு - 7 பகுதியில் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 40 ஆகும். இதில் இதுவரை ஒப்படைக்கப்படாத 29 வீடுகளே ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் தொழிலாளர் பிரச்சினைகளுக்குத் தீர்வு

## விசேட வேலைத்திட்டம் அறிமுகம்

**கொழும்பு, ஒக். 17**

**புலம்பெயர் தொழிலாளர்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகள் மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக விசேட வேலைத்திட்டம் ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கோஷல விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.**

அதன் பிரகாரம் குறித்த வேலைத்திட்டத்துக்கு 'தலைவருக்கு சொல்லுங்கள்' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

வேலையாள்களை வெளிநாட்டுத் தொழிலுக்கு அனுப்பும்போது அதிகாரிகள் உள்ளிட்ட இடைத்தரகர்கள் அவர்களிடமிருந்து முறைகேடாகப் பணம் அறவிடும் நடவடிக்கை இடம்பெற்று வருகிறது. இந்தச் செயற்பாடுகளை புதிய அரசாங்கத்தின் மூலம் நூறு வீதம் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்போம். பல்வேறு வழிகள் ஊடாக எங்களுக்கு முறைப்பாடுகளை சமர்ப்பிக்கமுடியும். சில சந்தர்ப்பங்களில் வெளி நபர்களால் மேற்கொள்ளப்படும் அநீதிகளாக் இருக்கலாம். இல்லாவிட்டால் அரச அதிகாரிகளால் இடம்பெறும் அநீதிகளாக இருக்கலாம். எந்தவகையில் அநீதி ஏற்பட்டாலும் அதற்குத் தீர்வு வழங்குவதற்கு தராதரம் பார்க்காமல் நான் நடவடிக்கை எடுப்பேன். முறைப்பாடுகளை கையளிக்க விசேட பிரிவொன்று பணியகத்தின் பிரதான காரியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 0112 864188 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் வழங்கப்படும் முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் 0717 593 593 என்ற வட்சப் இலக்கம் ஊடாகவும் முறைப்பாடுகளை அனுப்பிவைக்க வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ச-6)

# தொற்று நோய்கள் பரவும் அபாயம்

கொழும்பு, ஒக். 17

வெள்ளநீர் வடிந்து செல்வதால் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் உள்ளதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

வயிற்றுப்போக்கு, எலிக்காய்ச்சல் மற்றும் புழு நோய்கள் போன்ற அறிகுறிகள் காணப்பட்டால், கூடிய விரைவில் மருத்துவ சிகிச்சை பெறவேண்டும். அத்துடன் உணவு சூடாகத் தயாரிக்கப்படுவதையும் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். குறிப்பாக, தண்ணீரை சுட வைத்துப் பாவனைக்கு எடுத்துக் கொள்ளுங்கள் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

பாராளுமன்ற தேர்தல் 2024
- யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் மாவட்டம் -
மானுக்கு வாக்களிப்போம்
இனத்துக்கு வாழ்வளிப்போம்
சட்டத்தரணி
விஸ்வலிங்கம் மணிவண்ணன்
முதன்மை வேட்பாளர், தமிழ் மக்கள் கூட்டணி
முன்னாள் முதல்வர், யாழ்.மாநகர சபை.


1
உமாகரன் இராசையா
- சட்டத்தரணி -

2
கதிரேசன் சஜீதரன்
- பிராந்திய முகாமையாளர் -

3
தவச்செல்வம் சிற்பரன்
-கட்டடக் கலைஞர் -

4
நா.கோகுலவாணி
- தொழில் முயற்சியாளர் -

5
பிரான்சிஸ் செல்ரன்
- கிரிக்கட் பயிற்றுனர் -

6
ஸ்ரீ.மிதிலைச்செல்வி
- நிறைவேற்று அதிகாரி SLIC-

7
முருகானந்தன் யசிந்தன்
- ஆசிரியர் -

8
வரதராஜன் பார்த்திபன்
- முன்னாள் மாநகர சபை உறுப்பினர் -

9
விஸ்வலிங்கம் மணிவண்ணன்
- முன்னாள் முதல்வர் -
தமிழ் மக்கள் கூட்டணி
X

## மீனவருக்கு எச்சரிக்கை

மட்டக்களப்பு முதல் திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக மன்னார் வரையான கடற்பிராந்தியங்களிலுள்ள மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப் பட்டுள்ளது. சிலாபம் முதல் கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பிராந்தியங்களில் கடல் அலையானது 2.5 முதல் 3 மீற்றர் வரை மேலெழக்கூடுமெனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. (ச)



## தினம் தெரியுமோ

ஒரு உயிர்ப்பலி வாங்கின பிறகாவது வல்லைப் பாலத்துக்கு கொஞ்சம் புத்தி வந்திருக்குது. பாலத்தின்ர தொடக்கத்தில இருந்து முடிவு வரை சிவப்பு கொடியள் கட்டுப்பட்டிருக்குது. அதைவிட பாலத்தின்ர தொடக்கப் பக்கத்திலையும், முடிவுப்பக்கத்திலையும் சென்றி மாதிரி தார்ப்பீப்பாவை வைச்சு அதில ஒவ்வொருத்தர் கையில சிவத்தக் கொடியோட போய் வாற ஆக்களிட்ட "கொஞ்சம் மெதுவாப் போங்கோ" எண்டு சொல்லுகினம். நல்ல விசயம். இப்போதைக்கு இந்தமாரிகாலத்தில பாலத்துக்கு தார்போடுறதோ இல்லாட்டி வேற ஏதும் திருத்தங்கள், மாற்றங்கள் செய்யிறதோ உடனடியா முடியாத அலுவல்தான். எண்டாலும் அதுமட்டும் ஏடாகூடாம ஏதும் நடக்கக்கூடாது எண்ட அக்கறையில கோப்பாய் பிரதேச செயலாளர்தான் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார். அவருக்கு மனித உயிரின்ர பெறுமதி தெரிஞ்சிருக்கு. அதால மனுசன் உடனடியா தன்னால முடிஞ்சளவுக்கு முயன்றிருக்கிறார். (நேற்று உடனடியா பாலத்தின்ர ரெண்டு பக்கத்திலயும் ஸ்லோவா போறத்துக்கான வேகத்தடை போடுப்பட்டிருக்கு)

இப்ப பிரச்சினை என்னெண்டால், எங்கட ஆக்கள்தான். அவையள் மாடு சொன்னால் கேக்காயினம். மணிகட்டின மாடு சொன்னாத்தான் கேப்பினம். அப்பிடிப்பட்டவை, ஒராள் கையில சிவத்தக் கொடியோட நிண்டு "அண்ணை மெதுவாப் போங்கோ, அக்கா, ஸ்லோவா போங்கோ" எண்டு சொன்னால் கேக்காமலே வந்த வேகத்தைக் குறைக்காமல் போகினமாம். அதிலையும் உந்த சீ.ரி.பி பஸ்காரரும், மினிபஸ்காரரும் தான் ஆக மோசமாம். அவையள் சும்மாவே போட்டிக்குத்தான் கலைபடுறவை. அப்படிக் கலைபடுறவை , அசம்பாவிதம் நடக்கக்கூடாதெண்ட நல்லெண்ணத்தோட கொடியோட நிண்டு மெதுவாப் போகச் சொல்லுறவரின்ர சொல்லை அஞ்சு சதத்துக்கும் மதிக்கினமில்லையாம்.

இன்னொரு மழை பெய்யேக்க, இப்பிடி கலைபடுறவை வல்லைவெளிக்குள்ள கவிண்டு கொட்டுண்டு கிடக்கேக்கதான் புத்தி வரும்போல. இவையள் தாங்கள் கவிண்டாலும் பரவாயில்லை, எதிரவாற ஆக்களிலை மோதினால் அதுகள் மெதுவா வந்தும் பிரியோசனமில்லையே. அதால மணிகட்டின மாடுகளை விட்டால்தான் அவைக்கும் புத்தி வரும். சாதாரண வேலை செய்யிற ஆக்களை அதில விடாமல், பொலிஸ்காரரை விட்டால் உப்பிடி துரத்துப்பட்டு ரேஸ் ஓடுற பஸ்காரர் கொஞ்சமெண்டாலும் சொல்வழி கேப்பினம். அப்பிடி பொலிஸ் சொல்லியும் கேளாமல் போனால், அவைக்கு பாலம் தாண்டின உடனேயே 'ஸ்பொட் பைன்' அடிச்சா அடுத்தமுறை ஆரும் சொல்லாமலே தாங்களாவே மெதுவா வருவினம். அவைக்கு மனிசர் முக்கியமில்லை, காசுதான் முக்கியம். அதால அவைக்கு விளங்கிற பாசையில, மணிகட்டின மாடுகளை வைச்சு சொன்னால் கொஞ்சமாவது வல்லைப் பாலத்து விபத்துகளைக் குறைக்கலாம்.



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிக்கோர் அரசன் கண்ணதாசன்



தன்னிகரில்லா நல் தமிழது வாழ
தமிழன்னை நல்கிய ஆசியும் கூட
கம்பர் வழியினில் கவியது பாட
கவியின் நாவினில் தமிழ் விளையாட
பாரதி பாதியில் விட்ட பணி தொடர
பாரதமதில் உதித்த தமிழராம் இவர்

எட்டாம் நிலை மட்டுமே எய்தி
எண்ணிலடங்கா எழுத்தாக்கம் எழுதி
எட்டா உயர்வதை எளிதாய் தொட்ட
முத்தமிழும் போற்றிடும் இவரின்
முத்தையா எனும் இயற்பெயர் தானும்
கண்ணன் பாலுள்ள காதலினாலும்
கண்ணதாசன் எனும் புனைப்பெயராயும்
காலப்போக்கில் ஆயினல் போலும்
திக்குகள் கூட நின் கவியது வாழும்.

திரையிசை பாடல் வரியாய் நாளும்
மற்றவர் யாரும் மாறுத்திடா புகழை
மறைத்து போயும் அடைந்திட்டீர் அன்றோ
பெற்ற நவ் போது தமிழுக்காய் நீர்ரண
பெற்றவள் தமிழவள் பேருவகை கொண்டிட
தமிழின்பால் தன்னக பற்றுதலை
தனித்துவமாய் தன் நடையினிலே தானும்
தமிழ்மொழி போல் ஓர் மொழியே இல்லை
இருக்கிறதென்பான்
தாய் பெண்ணேயில்லையென
இங்கிதம் கொஞ்சம் நழுவிப் போயும்
கவிரசம் கொஞ்சம் பெருகிப் போயும்
தமிழின் இனிததை கவியாய் வடித்திட

காலம் காலமாய் கவிஞர் இருப்பினும்
தத்துவம் ததும்பும் தனித்துவ கவியினை
தத்ரூபமாய் தடையறத் தந்திட
தத்துவக் கவிஞர் உம்போல் யாருமிலர்
கர்ணனின் சிறப்பதை கவியால் தானும்
மன்னவர் மணியேற்கும் கண்ணனும்
பணி செய்ய உன்னடி பணிவாளென
காலம் விஞ்சியும் வாழ்ந்திடச் செய்த
கவிக்கோர் அரசனாய கவியரசாம் இவர்

திரையில்லா திறந்த நூலாய் தன் வாழ்வையாக்கி
திருத்தியமைக்கா தவறையும் மேற்கோள் காட்டி
தன்னிலையின் தவரைக் கூட தனியாய் கூறி
மாற்றம் என் மானிடத் தத்துவம்
மாறாதிருக்க நாள் மரமா செடியாவென
மனதில் பட்டதை மறைவின்றி என்றும்
கருத்தாய் கூறிடுமிவரின் கடைசிக் கவியாம்
கண்ணே கலைமானே கன்னிமயிலென
கண்டேன் உனை நானே
சிறுகூடல்பட்டி தொட்டு சிக்காகோவில் முடிந்து
சிலையாய் இன்று தமிழகமதில் வாழும்
கவியரசின் தமிழ்வாசம் தூரதேசம் தாண்டியும்
காதுகளில் ஒலித்திருக்கும் கானமாய் என்றும்

துவர்னிகா பாலகிருஷ்ணன்

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். செலவுகள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போல நடைபெறும். பணியாளர்களால் பிரச்சினை ஏற்படும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிறுசிறு சங்கடங்கள், வீண் செலவுகளும் ஏற்படக்கூடும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரையும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். ஆதாயம் கிடைக்கும். விற்பனையும் இலாபமும் கூடுதலாக இருக்கும். ஆதாயம் உண்டாகும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. உணவு விடயத்தில் கவனம் தேவை.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடி இருக்கும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று வந்து சேரும். செலவுகளால் கையிருப்பு கரையும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். காரியம் அனுகூலமாக முடியும். மகிழ்ச்சியுடன் வாங்கித் தருவீர்கள்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும். கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீங்கும். உறவினர்களுக்காக செலவு செய்ய நேரிடும்.

**தனுசு:** மனதில் அவ்வப்போது சஞ்சலங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டாம். உறவுகளால் செலவுகள் ஏற்படும். குழப்பம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொறுமை அவசியம்.

**மகரம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். இளைய சகோதரர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டு வருவார்கள். ஆதாயம் உண்டாகும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. பண உதவி செய்வார்கள். காரியம் அனுகூலமாக முடியும். எதிரிகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். வியாபாரம் வழக்கம்போலவே காணப்படும்.

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்களால் வீண் மனஸ்தாபம் ஏற்படும். புதிய முயற்சியைத் தவிர்ப்பது நல்லது.

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், ஒக். 17

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் மாதாந்த திருவாசக முற்றோதல் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 7 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆரம்பமாகி நண்பகல் 12 மணி வரை இடம்பெறவுள்ளது.


அதனைத் தொடர்ந்து அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கலும் நடைபெறும். (ச-66)

## பரிசில் நாள் நிகழ்வு!

யாழ்ப்பாணம், ஒக். 17

கைததடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசில் நாள் நிகழ்வு பாடசாலை அதிபர் நாகலிங்கம் கருணாகரன் தலைமையில் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை கலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கிறிஸ்தோபர் கமலராஜன் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற அரசாங்க பணிப்பாளர் நாயகம் திருமதி. கௌரி ரமணா கலந்துகொள்ளவுள்ளார். (ச-22,131)



## ஆக்கத்திறன் போட்டி

கிளிநொச்சி, ஒக்.17

நவராத்திரி தினத்தை முன்னிட்டு மாணவர்களது ஆளுமைப் பண்பினை வளர்த்தெடுக்கும் நோக்கில், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அறநெறிப் பாடசாலைகளுக்கிடையில் ஆக்கத்திறன் போட்டிகள் அண்மையில் நடத்தப்பட்டன. (ச-25,9)

## 'சித்திர முத்திரைகள்' கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக்,17

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் 'சித்திரமுத்திரைகள்' என்னும் ஓவிய,கைவினைப் பொருட்களின் கண்காட்சி, யாழ்.கலைத்தூது அழகியல் கல்லூரியில் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் 21 ஆம் திகதி திங்கட்கிழமை வரை தினமும் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளது. கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வு நாளை காலை 9.30 மணிக்கு இடம்பெறும். நிகழ்வில் சித்திரப் பாட ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி ஜெயராணி அம்பலவாணர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## அத்துமீறலும் அவசிய மாற்றமும்!

அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பில், தமிழக மீனவர்களையும், ஈழ மீனவர்களையும் ஒருங்கிணைத்து கொழும்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தீர்மானித்திருக்கின்றது அநுர அரசாங்கம். இதன்படி, இந்த மாதத்தின் இறுதிப் பகுதியில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தமிழக மீனவர்களின் அத்துமீறலால் வடக்கு கடற்பரப்பில் ஏற்பட்டிருக்கின்ற கடற்பதற்றம் மிகப் பெரியது. பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ச்சியாக நிலவிவரும் இந்தப் பெரும் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விதமாக, இரு தரப்பினரையும் ஒரேமேசையில் அமரவைப்பதற்கு மேற்கொண்டுள்ள எத்தனம் பாராட்டப்பட வேண்டியது. ஆனால், இந்த முயற்சிகளை வெற்றி பெறச்செய்ய வேண்டியது வெறுமனே கொழும்புக்கு மட்டுமான பொறுப்பல்ல. இந்த விடயத்தில் மிகப்பெரும் வகிபங்கை ஆற்றவேண்டியவர்கள் தமிழகத் தலைவர்களே.

அத்துமீறிய மீன்பிடிக்காக ஒவ்வொரு தடவையும் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்படும் போதெல்லாம், அந்தக் கைது நடவடிக்கையை தமிழகத் தலைவர்கள் வலுவாகக் கண்டித்திருக்கின்றனர் எதிர்த்திருக்கின்றனர். தமிழக முதல்வர் ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், ம.தி.மு.க.வின் தலைவர் வைகோ, பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ், அதன் பிரதானியான அன்புமணி என இந்தப் பட்டியல் நீட்சியானது. இலங்கைக் கடற்படை தமிழக மீனவர்களை அத்துமீறிய வகையிலும் அராஜகமாகவும் தான் கைதுசெய்கின்றது என்பதே தமிழகத் தலைவர்களின் இதுவரையான கண்டனங்களில் பொதுவான கருத்தாக அமைந்துள்ளது. ஆக, இந்த விடயத்தில் ஈழத்தமிழர்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்பை 'பிரச்சினையின் பின்னணியை பிறிதொரு தளத்தில் நின்று'அதுவும் ஈழத்தமிழர்களின் தளத்தில் நின்று சிந்திப்பதற்கு ஈழத்தமிழர்களின் நெருக்கமான உறவுகள் என்று கூறிக்கொள்ளும் தமிழகத் தலைவர்கள் முயன்றதாயில்லை. அத்துமீறிய மீன்பிடி விவகாரத்தில் மாற்றம் தேவைப்படும் விடயமும் இதுதான்.

இரு மீனவத் தரப்புகளையும், ஒரேமேசையில் அமரவைப்பதோ அல்லது கலந்துரையாடல்களை முன்னெடுப்பதோ இந்தப் பிரச்சினைக்கு முற்றுமுழுதான தீர்வைத் தந்துவிடும் என்றில்லை. ஏனெனில் இதற்கு முன்னரும் இவ்வாறான பேச்சுகள் இடம்பெற்றிருக்கின்றன. ஆதலால், இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டுமானால், தமிழக மீனவர்கள் அத்துமீறிய மீன்பிடியில் தான் ஈடுபடுகின்றார்கள் என்ற புரிதலை தெளிவை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். 30 ஆண்டுகளாக போரால் சின்னாபின்னமாகியுள்ள வடமாகாண மீனவர்களின் பொருளாதாரத்தை, அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளால் மேலும் வதைத்து விடக்கூடாது என்ற குறைந்தபட்சப் புரிதல் தமிழக முதல்வர் உள்ளிட்ட தமிழகத் தலைவர்களிடம் ஏற்படுமாக இருந்தால், இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு விரைந்து எட்டப்படும். துரதிர்ஷ்டவசமாக அவ்வாறானதொரு நிலைப்பாட்டை வரித்துக் கொள்வதற்குத் தமிழகத் தலைவர்கள் தயாரில்லை. ஏற்படவேண்டிய 'உண்மையான மாற்றம்' ஏற்படாமல் மேற்கொள்ளப்படும் இந்தப் பேச்சுகளால் எந்தப் பயனும் இல்லை. அத்துமீறிய மீன்பிடியைத் தடுத்து நிறுத்துவதற்கான நல்லெண்ண சமிக்ஞையை இலங்கை வெளிப்படுத்தியது என்ற பதிவு மட்டுமே மிச்சமாகும்.




# உலகளாவிய மாற்றத்துக்கேற்ப கல்வித்துறைக்குள் மாற்றங்கள்!

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

**கொழும்பு, ஒக். 17**

**உலகளாவிய தேவைகளை கருத்திற்கொண்டு இலங்கையின் கல்வி தொடர்பான எதிர்காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற கல்வி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சுகளின் முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் மனித வளத்தை மேம்படுத்துவதற்காக மாணவர்களை அறிவாற்றல் நிறைந்தவர்களாக மாற்ற வேண்டும். அடுத்த பத்து ஆண்டுகளில் உலகுக்குத் தேவையான மனித வளத்தை உருவாக்கும் பொறுப்பு கல்வி அதிகாரிகளை சார்ந்துள்ளது. அதற்கான பரந்த நோக்குடன் கல்வித் திட்டங்களைத் தயாரிக்க வேண்டியது அவசியம் என்றும் ஜனாதிபதி அநுர மேலும் தெரிவித்துள்ளார். பாடசாலைக் கல்வி நவீனமயமாக்கல், ஆசிரியர் கல்வி, இடைநிலைக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, தகவல் தொழில்நுட்பக் கல்வியின் மேம்பாடு என்பன தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது. (ம)

*யாழ்ப்பாணத்தில்*

## காலநிலை பாதிப்பால் 4 குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக் . 17

மழையால் யாழ்ப்பாணத்தில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 11 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். நான்கு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி. என்.சூரியராஜா தெரிவித்துள்ளார். அத்துடன் முக்கியமான உட்கட்டமைப்புகள் 2 சேதமடைந்துள்ளன. அவற்றில் ஒன்றின் மேல் மரம் சரிந்ததில் இவ்வாறு பகுதியளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சங்கனை, நல்லூர் மற்றும் பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலே இந்தப் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## குளவி கொட்டி பெண் பலி

கொழும்பு, ஒக். 17

ஹப்புத்தளை, தங்கமலை பகுதியில் குளவிக் கொட்டுக்கு இலக்கான பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். பெருந்தோட்டப் பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த போது அவர் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளார். இந்தச் சம்பவத்தில் 65 வயதான இரண்டு பிள்ளைகளின்தாய் ஒருவரே உயிரிழந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## எயார் லைன்ஸ் விற்பனையில்லை

யாழ்ப்பாணம், ஒக் . 17

ஸ்ரீலங்கன் விமானசேவையை விற்பனை செய்யும் திட்டத்தைக் கைவிட இலங்கையின் புதிய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக, நிறுவனத்தின் புதிய தலைவர் தெரிவித்துள்ளார்.

நிறுவனத்தை அதிக இலாபம் ஈட்டும் விமான சேவையாக மாற்றுவதற்குத் தேவையான மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ச)

## துப்பாக்கிச்சூடு: ஒருவர் பலி

கொழும்பு, ஒக். 17

மாத்தறை, கேகனதுர பிரதேசத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். முச்சக்கரவண்டியில் பயணித்த நபர் மீது காரில் இருந்து வந்த நபர் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச)

### நாளை

**18.10.2024**

வெள்ளிக்கிழமை - ஐப்பசி - 01

சுபநேரம் : 06.02- 07.32

ராகுகாலம் : 10.32 - 12.02

### நாளொரு நல்வார்த்தை

**பெரும்பாலும் முதல் சிந்தனை தெளிவற்றதாக இருக்கும்; எதற்கும் மறு சிந்தனை செய்யுங்கள்.**

- ஷேக்ஸ்பியர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விதைப்பொதிகள் வழங்கல்

கிளிநொச்சி, ஒக்.17

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக உளுந்து மற்றும் பயறு பயிர்ச்செய்கைத் திட்டத்தின் கீழ் விதைப்பொதிகள் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் 58 பயனாளிகளுக்கு உளுந்து விதைப் பொதிகள் 350 கிலோகிராம் வீதமும், 14 பயனாளிகளுக்கு பயறு விதைப்பொதிகள் 90 கிராம் வீதமும் வழங்கப்பட்டன. (ரி-9)



கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற ஆசிரியர்தின நிகழ்வில் ஆசிரியர்கள் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர். (ச-25,17)

# டெங்குக் கட்டுப்பாடு களப்பரிசோதனை

யாழ்ப்பாணம், ஒக்.17

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினரால் நடத்தப்பட்ட டெங்குக் கட்டுப்பாட்டு களப் பரிசோதனைகளில் அரச நிறுவனம் உட்பட அரச மற்றும் தனியார் பாடசாலைகளில் டெங்கு குடம்பிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. யாழ் .மாவட்ட செயலர் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணியகம் ஆகியவை விடுத்த பணிப்பின் பேரில் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம், தென்மராட்சி பிரதேச செயலகம் மற்றும் பொலிஸார் இணைந்து டெங்கு கட்டுப்பாட்டு களப் பரிசோதனைகளை அண்மையில் நடத்தினர். இதன்போது டெங்கு குடம்பிகள் அடையாளம் காணப்பட்ட இடங்களை வைத்திருந்தோருக்கு எச்சரிக்கை விடுத்ததோடு உடனடியாக துப்புரவு செய்யுமாறும் பணிக்கப்பட்டது. (ச-25,9)

# வடிகால்கள் கள ஆய்வு

யாழ்ப்பாணம், ஒக்.17



யாழ்ப்பாணம் ஆறுகால்மடத்தடியில் அமைந்துள்ள குருசுமதவடி வடிகால் மற்றும் மானிப்பாயில் அமைந்துள்ள கொத்தலாவ வடிகால் ஆகியவற்றின் நிலைமைகள் தொடர்பாக யாழ். மாவட்ட செயலர் ம. பிரதீபன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நேரடியாக சென்று பார்வையிட்டார்.

இதன்போது மாவட்டச்செயலரால் , டெங்கு நோய் வராமல் தடுப்பதற்கான முன்னேற்பாடுகள், வடிகாலின் நீரோட்டம் மற்றும் துப்பரவு சம்பந்தமான விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து, எடுக்க வேண்டிய நடிவடிக்கைகளை சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் ஊடாக எடுப்பதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. (ச-25,27,66)





பொலநறுவையில் கடந்த மாதம் நடைபெற்ற பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பளு தூக்கும் போட்டிகளில் 20 வயதுக்கு கீழ் பிரிவில் யாழ்ப்பாணம் சென் .ஜோன்ஸ் கல்லூரி மாணவன் சுதானந்தராஜா சகீதன் தங்கப்பதக்கம் வென்றுள்ளார். (ச-25, 9)





வேவில் விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தின் வாணி விழா சனசமூக நிலையத் தலைவர் த.ஸ்ரீதர்சன் தலைமையில் அறநெறி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி வடமராட்சி தெற்கு மற்றும் மேற்கு பிரதேசசபைச் செயலாளர் கணேசன் கம்சனாதன் கலந்துகொண்டார். (ச-25)



தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்தின் ஏற்பாட்டில் , தேசிய நல்லிணக்கக் கொள்கை, தேசிய ஒற்றுமைக்கான செயற்றிட்டத்தை உருவாக்கல் தொடர்பான ஆலோசனைச் செயலமர்வு யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம.பிரதீபன் தலைமையில் யாழ்.மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. (ச-25,66)





யாழ். ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலய மாணவர்களின் சிறுவர் சந்தை நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்பத்தியாளரைக் காக்க 'பராத்தே' சட்டம் தேவை!

## ஜனாதிபதி தலையிட வேண்டுமென கோரிக்கை

கொழும்பு, ஒக்.17

**உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கின்ற சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலையீடு செய்ய வேண்டும் என சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர் சங்கங்களின் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.**

பராத்தே சட்டம் என்பது தமது சொத்துகளை வங்கிகளில் ஈடு வைத்து கடன் பெற்றவர்கள், கடனைத் திருப்பிச்செலுத்த முடியாத சந்தர்ப்பத்தில் ஈடு வைக்கப்பட்ட சொத்துகளை வங்கிகள், ஏலத்தில் விற்பனை செய்வதை தடை செய்யும் சட்டமாகும். இந்தச் சட்டத்துக்கு வங்கிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தமையால் சட்டம் ஆறு மாதங்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டது.

இந்தத் தடைக்காலம் வருகிற டிசெம்பர் 15 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. 2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து 2 இலட்சத்து 63 ஆயிரம் சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. வங்கிகளால் பறிமுதல் செய்யப்பட்ட ஆயிரத்து 400 சொத்துகள் திரும்ப ஒப்படைக்கப்படவேண்டும். நடுத்தெருவில் விடப்பட்டுள்ள 45 இலட்சம் தொழிலாளர்கள் பாதுகாக்கப்படவேண்டும். எமது பிரச்சினைக்கு உடனடியாக ஜனாதிபதி தீர்வுகாண வேண்டும். என்றும் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ச-25,

# தொடர் மழையால் விதைப்பு பாதிப்பு

## விவசாயிகள் கவலை



கிளிநொச்சி, ஒக்.17

பெய்து வரும் பெருமழை காரணமாக பூநகரிப் பகுதியில் வயல்களில் நீர் தேக்கமடைந்துள்ளதால் காலபோக நெல் விதைப்பு மேற்கொள்ளமுடியவில்லை என்று நெற்செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இந்தப் பகுதியில் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் நெல் வயல்களில் வருடாந்தம் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மழைகாலங்களில் வயல்களில் மேலதிகமாக காணப்படும் வெள்ளம் வாய்க்கால் வழியாக கடலுக்குச் செல்கின்றது. இந்த வாய்க்கால் நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் உள்ளதால் நீர் வழிந்தோட முடியாமல் வயல்களில் நீர் தேங்கியுள்ளது. இதனால் பயிர்கள் அழிவடையும் நிலையில் காணப்படுகின்றன என்றும் விவசாயிகள் சுட்டிக்காட்டினர். (ச- 9)



# வடமராட்சியில் சிறப்புற்ற பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஒக்.17

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினதும், கலாசார அலுவல்கள் திணைக்களத்தினதும் நிதி அனுசரணையில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகமும் வடமராட்சி வடக்கு கலாசாரப் பேரவையும் கலாசார அதிகாரசபையும் இணைந்து நடத்திய வடமராட்சி பண்பாட்டுப் பெருவிழா பருத்தித்துறையில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா பிரதம விருந்தினராகவும், வடமாகாண கலாசார அமைச்சின் உதவிச் செயலாளர் சு.சுபாஸ்கரன் மற்றும் யாழ்.மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி சு.விஜேயரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், மூத்த கலைஞரும் கலாசார உத்தியோகத்தர்களான இ.ஆழ்வாப்பிள்ளை மற்றும் ஆ.வடிவேல் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் பங்கேற்றிருந்தனர்.

புலோலி கிருஸ்ணாகரன் குழுவினரது பல்லியம், ஞானசம்பந்தர் கலைமன்ற மாணவியர்களின் வரவேற்பு நடன நிகழ்வு, இ.குலசேகரம் அரங்கத்திறப்பு, அபிநய கலாகேற்றா நடனாலயத்தினரின் தில்லானா, கலைக்கோயில் கலாமன்றத்தினரின் கிராமிய இசை விருந்து, செம்பருத்தி இதழ்-2 வெளியீடு, நெடியகாடு பரதசுரபி கலைமன்றத்தினரின் மயில் நடனம், பருத்தித்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் கௌத்துவம், பரத சிவாலய கலாமன்றத்தினரின் 'தாருகாவனம்' நாட்டிய நாடகம் மற்றும் கற்கோவளம் வேணுகான சபா கலைஞர்களின் அரிச்சந்திரா மயான காண்டம் என்பன நிகழ்வை அலங்கரித்தன. தொடர்ந்து தெரிவுசெய்யப்பட்ட கலைஞர்களுக்கு பிரதேச கலாசாரப் பேரவையின் கலைப்பரிதி, இளங்கலைஞர், இளங்கலைப்பரிதி விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் தேசிய கலை இலக்கியப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டது. (ச-100)

# அர்ஜூன் அலோசியஸ் பிணை மனு நிராகரிப்பு

கிளிநொச்சி, ஒக்.17

அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய 3.5 பில்லியன் ரூபா வற் வரியை செலுத்தாமல் ஏமாற்றிய வழக்கில் 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள டபிள்யூ. எம். மெண்டிஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அர்ஜுன் அலோசியஸ் உட்பட இருவரை பிணையில் விடுவிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது. இது ஒரு குற்றவியல் வழக்காக இல்லாததால் பிணைக் கோரிக்கை நிராகரிக்கப்படுவதாகவும் கொழும்பு நீதவான் நீதிமன்றம் அறிவித்துள்ளது. (ச)

# செல்லப்பா சுவாமி குருபூசை நிகழ்வு

கிளிநொச்சி, ஒக்.17

நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்கு அருகில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

திருமுறை மற்றும் நற்சிந்தனை பாடல்களைத் தொடர்ந்து "யோகர் சுவாமி எங்களின் அவதாரம்" எனும் நூல் பற்றி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமஸ்கிருதத்துறை தலைவர் பிரம்மஸ்ரீ ச .பத்மநாபன் நிகழ்த்தவுள்ளார். (ச-இ)

# அதிகாரப் பகிர்வை மறுத்தால் அநுரவுக்கு கோத்தாவின் கதியே

## சபா குகதாஸ் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக்.17

அதிகாரப் பகிர்வை மறுத்தால் கோத்தாவுக்கு நடந்ததே அநுரவுக்கும் நடக்கும் என ரெலோ இயக்கத்தின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினருமான சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிங்கள இனவாதத்தில் வளர்க்கப்பட்டு தேசிய மக்கள் சக்தி என்ற பெயருடன் ஜனாதிபதிக் கதிரையில் அமர்ந்து கொண்ட அநுர அரசு தமிழர் விவகாரத்தில் தலையிடாவிட்டால் ஆட்சிக் கதிரையில் இருந்து வெளியேறுவதற்கான நாள்களை எண்ணும் நிலைமை உருவாகும்.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய தமிழர்களுக்கு பொருளாதாரப் பிரச்சினை மட்டும் தான் உள்ளது எனவும் அதிகாரப்பகிர்வு தேவையற்றது, 13 ஆம் திருத்தம் நீக்கப்படவேண்டும் எனக் கூறிக் கொண்டு அதனை நீக்க புதிய அரசமைப்புக் குழுவை தன்னிச்சையாக நியமித்ததன் விளைவை எப்படி அனுபவித்தார் என்பதை நாடே அறியும். இதனை அநுர அரசும் புரிந்துகொள்ளவேண்டும் என்றார். (ச-20)

# சிறுவர், முதியோர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.17

யாழ்.சிறுபிட்டி முதியோர் சங்கம் மற்றும் சிறுபிட்டி இ.த.க. பாடசாலைச் சமூகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் உலக சிறுவர், முதியோர் தின நிகழ்வு பாடசாலையின் அதிபர் ந.கிருஸ்ணமூர்த்தி, முதியோர்சங்கத் தலைவர் அ.அருந்தவநேசன் ஆகியோர் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதமவிருந்தினராக ஓய்வு நிலை பேராசிரியர் கனகசபை சிவானந்தமூர்த்தி, சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் முதியோர்சங்கச் செயலாளர் மு. விக்னேஸ்வரன், சிறுபிட்டி கிழக்கு முன்னாள் கிராம அலுவலர் திருமதி சிவதீசன் ஜெனிதா, கௌரவ விருந்தினர்களாக சிறுபிட்டி கிழக்கு கிராம அலுவலர் கா.குகதாசன், சிறுபிட்டி கிழக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தயாபரன் உமாகௌரி, சிறுபிட்டி கிழக்கு சமுர்த்தி உத்தியோகத்தர் வி.தனீஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். நிகழ்வில் அனைவரையும் பங்கேற்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்துக்கள்



ஆசிரியர் சேவையில்

15.04.1985 முதல்

39 வருடங்கள் அளப்பரிய

சேவையாற்றி 17.10.2024

இல் தனது அறுபதாவது

வயதில் மணிவிழா காணும்

எமது ஆசிரியை

**திருமதி தேவராணி**

**நாகராஜா**

(இலங்கை ஆசிரியர் சேவை தரம் - 1)

அவர்களை பாராட்டி

வாழ்த்துவதில்

பெருமகிழ்வடைகின்றோம்.

பற்பலரும் பற்றினொடு பற்றிடுநற் பெற்றியதாய்

நற்பணியே நல்கிடுமா சிரியமணி - உற்றுணரும்

திகழ்தேவ ராணியராம் திருநாக ராசர்துணை

புகழ்சேவை புகலவிறை காப்பு.

வாழ்த்துவோர்:

பாடசாலைச் சமூகம்

யா/ மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்

(CR/43413) J-1

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.17

வலிகாமம் வடக்கில் மீளக்குடியேறாத மக்களுக்கான பொதுக்கூட்டம் பலாலி புனித ஆரோக்கிய மாதா ஆலய வளாகத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கூட்டத்துக்கு ஜனாதிபதியின் அரசியற் பிரமுகர்கள் வருகை தரவுள்ளமையால் வலிகாமம் வடக்கில் மீளக்குடி யேறாத மக்கள் அனைவரும் வருகை தந்து ஒத்துழைக்குமாறு வலிகாமம் வடக்கின் சமூக அமைப்புகள் வேண்டு கோள் விடுத்துள்ளன.

(சு-25)

## கடை வாடகைக்கு தேவை

மானிப்பாய், சுன்னாகம், சாவகச்சேரி போன்ற பகுதிகளில் கடை வாடகைக்கு தேவை.

பிரதான வீதிகளில் உள்ள கடைகள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

077 98 98 190

075 47 57 056

## வீடு வாடகைக்கு உண்டு

உரும்பராய் சந்திக்கும் ஊரெழுவுக்கும் இடைப்பட்ட பகுதியில் வீடு வாடகைக்கு உண்டு.

(நிறுவனங்கள் நடத்துவதற்கு உகந்தது)

தொடர்புகளுக்கு: 070 528 9745

எம் இனிய உறவுகளே வணக்கம்,

## யாழ் விழிப்புலனற்றோர் சங்க வளர்ச்சி நிதிக்காக உற்சவகால அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு

இற்றைக்கு 48 ஆண்டுகளுக்கு மேலாக உங்களின் நிதிப் பங்களிப்போடு இயங்கி வருகின்ற யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் ஆண்டுதோறும் பார்வையற்றவர்களின் பன்முகப்பணிகளுக்காக முன்னெடுத்து வருகின்ற உற்சவகால அதிர்ஷ்ட இலாப செயற்றிட்டத்தினை இந்த ஆண்டும் வர்த்தகப் பெருமக்களின் அனுசரணையோடும் மனிதநேயமுள்ள தங்களின் உதவியோடும் எமது பொதுச்சபை உறுப்பினர்களின் பங்களிப்போடும் முன்னெடுத்திருந்தோம். அதன் வெற்றியாளர் தெரிவை நாம் 15.10.2024 அன்று எமது பிரதான அலுவலகத்தில் சர்வதேச வெள்ளைப்பிரம்பு தின விழாவில் நடத்தினோம் அத் தெரிவில் 1ம் பரிசான 32" SGL தொலைக்காட்சியினைப் பெறும் அதிர்ஷ்டசாலிக்குரிய இலக்கமாக 11399 தெரிவுசெய்யப்பட்டுள்ளது. 2வது பரிசான Gas Cooker (Nipon) & Litro Gas Cylinder பெறும் அதிர்ஷ்டசாலிக்குரிய இலக்கமாக 00438 தெரிவுசெய்யப்பட்டுள்ளது. 3வது பரிசான மின்விசிறியை பெறும் அதிர்ஷ்டசாலிக்குரிய இலக்கமாக - 35185 தெரிவுசெய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவிக்கும் நாம் அதிர்ஷ்டசாலிகளுக்கு வாழ்த்துக்களையும் எம் மீது அக்கறை கொண்ட அனைத்து நண்பர்களுக்கு எமது அன்பையும் பரிமாறி மகிழ்கிறோம்.

வெற்றியாளர்களே உங்கள் பரிசுகளை 30.11.2024 இற்கு முன்பதாக அலுவலக தினங்களில் காலை 09.30 மணி தொடக்கம் மாலை 04.00 மணி வரையுள்ள நேரத்துக்குள் தங்களது அதிர்ஷ்ட சீட்டுக்களை கொண்டு வந்து உறுதிப்படுத்தி பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். 30.11.2024 இற்குப் பின்னர் தங்களால் பெற்றுக்கொள்ளப்படாத பரிசில்கள் எமது நிறுவனத்திற்கே சொந்தமானது என்பதையும் தங்களின் மேலான கவனத்திற்கு தெரியப்படுத்துகிறோம். உறவுகளே அடுத்த ஆண்டும் எமது சமூகப்பணிக்கான இச் செயற்றிட்டத்தில் அன்போடும் அக்கறையோடும் பங்களிக்குமாறு தங்களைத் தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

செயலாளர்

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம்

# மணிவிழா நாள் வாழ்த்து

செல்வி

**வளர்மதி சங்கரலிங்கம்**

B.A, PGDE, SLTS-I



**சேவைக் காலம்**

21.10.1988 - 28.04.1993
மயிலிட்டி றோ.க.த.க. பாடசாலை
28.04.1993 - 31.12.1994
பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
01.01.1995 - 31.12.2000
அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்
01.01.2001 - 09.09.2001
மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியாலயம்
10.09.2001 - 23.01.2007
யா/வீமன்காமம் ம.வி
24.01.2007 - 04.01.2016
யா/ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம்
05.01.2016 - 16.10.2024
யா/ஸ்கந்தவரோதய கல்லூரி

ஆசிரியரின் சிறப்பான சேவையைப் பாராட்டும் இந்நாளில் இறையருளுடன் பல்லாண்டு காலம் நோய் நொடியின்றி சீரும் சிறப்புமாக வாழவும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்

கல்விசார் கல்விசாரா ஊழியர் நலன்புரிக்கழகம்

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

(CS 1637) A-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடற்றொழிலாளரின் குரலாக நாடாளுமன்றில் ஒலிப்போம்!

யாழ்ப்பாணம், ஒக். 17

வடக்கு கடற்றொழிலாளர்கள் மற்றும் வடக்கில் வாழும் மலையகத் தமிழர்களின் வாழ்வாதாரங்களை உயர்த்தி அவர்களின் குரலாக நாடாளுமன்றில் எங்கள் குரல்கள் ஒலிக்கும் என ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் யாழ். தேர்தல் மாவட்டத்தின் முதன்மை வேட்பாளர் ஞானப்பிரகாசம் சுலக்சன் தெரிவித்தார். ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் சார்பில் கண்ணாடிச் சின்னத்தில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் அறிமுகம் நடைபெற்றது. நிகழ்வில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-


கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரங்கள் உயர்த்தப்படவேண்டும். அதேபோன்று வடக்கில் வாழும் மலையகத் தமிழர்களின் வாழ்வாதாரங்களும் மேம்படுத்தப்படவேண்டும். ஒவ்வொரு தேர்தல் காலங்களிலும் அரசியல்வாதிகள் எங்களைச் சந்திக்க வருவார்கள். எமது வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதாகவும், பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதாகவும் வாக்குறுதிகளை வழங்கிச் செல்வார்கள். தேர்தல் முடிந்த பின்னர் அவர்கள் எங்களைக் கண்டு கொள்ள மாட்டார்கள். எனவேதான் எங்கள் கிராமங்களில், எங்கள் சமூகங்களில் நடக்கும் பிரச்சினைகளையும் நாடாளுமன்றில் நாமே எடுத்துச் சொல்லவேண்டும் என்பதற்காவே நான் தேர்தலில் போட்டியிடுகிறேன் என்றார். முற்போக்கு தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் சுதர்சிங் விஜயகாந்த் கருத்துத் தெரிவிக்கையில்;

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு வேலை செய்தோம். அதன் போது அவர்களுடன் நாம் உடன்படிக்கை செய்தோம். அரசியல் சூழ்ச்சியால் எமக்கு ஆசனம் வழங்கப்பட்டவில்லை. அதனால் தான் நாம் ஐக்கிய சுதந்திர முன்னணியின் கூட்டணியில் இணைந்தோம்-என்றார். (ஒ.20)

உலகவங்கியின் நிதியில்

# கிளிநொச்சி மாவட்டத்துக்கு சூரியமின்கல யானைவேலி!

கிளிநொச்சி, ஒக். 17



உலக வங்கியின் நிதியுதவியில் காட்டுயானைகளிடமிருந்து விவசாயிகளின் வாழ்வாதாரப் பயிர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் கிளிநொச்சி மாவட்டத்துக்கு சூரியமின்கல யானை வேலி அமைக்கும் பணி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பூநகரி கமநலசேவை நிலையத்துக்குட்பட்ட செம்மன்குன்றுப் பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரி சாம்பசிவம் கேசிகா, பூநகரி கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் கு. குணசீலன், விவசாயிகள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ச-22,113)




# இராணுவத்தினரால் புதிய வீடு கையளிப்பு

கிளிநொச்சி, ஒக்.17

யாழ். பாதுகாப்பு கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்ரமசிங்கவின் எண்ணக்கருவுக்கு அமைவாக 55 ஆவது காலாட் படைப் பிரிவின் வழிகாட்டலில் தேசியப் பாதுகாப்புப் படையினரால், இலங்கை இராணுவத்தின் உயர் அதிகாரி விக்கும் லியனுகே தலைமையில் கிளிநொச்சி பணங்கண்டி பகுதியில் வசிக்கும் பொருண்மியம் நலிவுற்ற குடும்பத்துக்கு புதிய வீடு ஒன்று நேற்றுப்புதன்கிழமை கையளிக்கப்பட்டது. (ச-25, 113,27)


# மரண அறிவித்தல்

தோற்றம்
11
.
11
.
1957



மறைவு
15
.
10
.
2024

## பாலசிங்கம் இராமசாமி

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பாலசிங்கம் இராமசாமி அவர்கள் நேற்று முன்தினம் (15.10.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பாலசிங்கம் - மரியாள் தம்பதியரின் மகனும், பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், சத்தியசீலன், சத்தியரூபன், சத்தியபாமா, சத்தியயெயந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாமினி, தர்சன், நிசாந்தன் ஆகியோரின் மாமனாரும், ஆராதனா, பிரணயன், லட்சணபிரியன், விதுரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (17.10.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி வீதி,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்
076 616 8226

(CS/1633) J-1


# வாடகைக்கு வீடுகள் அவதானம் தேவை

கொழும்பு, ஒக். 17

இணையத்தளங்களை அடிப்படையாகக் கொண்ட மோசடிகளில் இலங்கையர்கள் சிக்கிக்கொள் ளல் அதிகரித்துள்ளது. வெளிநாட்டவர்களுக்கு வீடுகளை வாடகைக்கு வழங்கும் போதும், ஹோட்டல்களில் அறைகளை வாடகைக்கு வழங்கும் போதும் உரிமையாளர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும். இவ்வாறு பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் இவ்வாறானவர்களுக்கு வீடுகளை வாடகைக்கு வழங்கும் வீட்டு உரிமையாளர்களும் இவர்களுக்கு உடந்தையாகவுள்ளனர் என்பது தெரிய வந்துள்ளது.


எனவே இது தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

அவ்வாறில்லை எனில் யாரும் அறியாமல் கோடிக் கணக்கான பணத்தை இழக்க நேரிடும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

ஒலிம்பியாட் போட்டி!

# புனித சவேரியார் மாணவி தேசியத்தில் இரண்டாமிடம்

மன்னார், ஒக். 17



கல்வி அமைச்சால் நடத்தப்பட்ட தேசிய விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மாணவி நயோலின் அபிறியானா அன்ரோனியோ குபேரக்குமார் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இந்தப் போட்டி மகரகம ஜனாதிபதிக் கல்லூரியில் நடைபெற்றது.

இவர் 2018 ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் நடைபெற்ற இங்கிலிஸ் றெசிரேசன் (English Resitation) போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார் என்பது குறிப்பிட்டது. (ச-22,56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கலைத்துறை சேவை இருவருக்கு விருது

யாழ்ப்பாணம், ஒக் . 17
இந்துசமயப் பேரவை நடத்தும் சிவபூஜா மாநாடும் இந்துசமயப் பேரவையின் தலைவர் ஈசான சிவசக்திகிரீவன் யாத்த சிவ பூஜாத் திறவுகோல் எனும் நூல் வெளியீடும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இந்துசமயப் பேரவையின் நடராஜர் மண்டபத்தில் மூத்த எழுத்தாளர் கோப்பாய் சிவம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் ஈழத்துக் கலைத்துறைக்குச் சிறப்பான பணிகள் ஆற்றிவரும் நாதஸ்வர மேதை ஈழநல்லூர் பி.எஸ்.பால முருகன், தவில் மேதை தெட்சணாமூர்த்தி உதயசங்கர் ஆகியோருக்கு லயஞானச் சக்கரவர்த்தி விருது இந்துசமயப் பேரவையின் தலைவர் ஈசான சிவ சக்திகிரீவன் வழங்கிக் கௌரவித்தார். இணுவில் திருப்பதி ஆலயப் பிரதமகுரு சோ.பிரசன்னாக் குருக்கள் சிவபூஜாத் திறவுகோல் நூலின் வெளியீட்டுரையை ஆற்றி நூலை வெளியிட்டு வைக்கப் பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ ச.சோமாஸ்கந்தக் குருக்கள் நூலின் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். (ச-66)

# காவலாளி கொலை சிறுவர்கள் கைது!!

## கொழும்பில் 'திடுக்' சம்பவம்

கொழும்பு, ஒக். 17
சிறுவர் இல்லமொன்றுக்கு பாதுகாப்புப் பணியிலிருந்த காவலாளி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இரண்டு சிறுவர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பின் புறநகர்ப் பகுதியிலுள்ள பெபிலியான பிரதேசத்திலுள்ள சிறுவர் இல்லத்தில் இந்தக் கொலைச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இந்தச் சிறுவர் இல்லத்துக்கு நீதிமன்றங்களால் அனுப்பி வைக்கப்பட்ட 16 மற்றும் 17 வயதுடைய இரு சிறுவர்களே சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

சிறுவர் இல்ல கிணற்றுக்கு அருகில் நேற்றுமுன் தினம் காலை காவலாளியின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தச் சம்பவத்துக்கு முன்னர் சிறுவர் இல்லத்துக்கு அருகில் உள்ள வீடொன்றுக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி திருடப்பட்டுள்ளது.

இந்தக் கொலையை வெளியில் இருந்து வந்து யாரோ செய்திருக்கலாம் என பொலிஸாரை நம்ப வைக்கும் நோக்கில் தான் இவ்வாறு செய்யப்பட்டுள்ளதாகவும் திருடப்பட்ட முச்சக்கரவண்டியில் சடலத்தை பெல்லன்வில ஏரியில் வீசுவதே சிறுவர்களின் நோக்கமாகும் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-இ)

# அனர்த்த முன்னாயத்தக் கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஒக்.17
வடகீழ் பெயர்ச்சி பருவமழை ஆரம்பிக்கவுள்ள நிலையில் பருவமழையின் போது ஏற்படும் அனர்த்தங்களை கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய முன்னாயுத்த நடவடிக்கைகள் தொடர்பான அனர்த்த முன்னாயத்தக் கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட பதில் செயலர் எஸ் .முரளீதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்டத்திலுள்ள திணைக்களங்களின் தலைவர்கள், இராணுவத்தினர் ,பொலிஸார், தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-25, 113)

# முன்னணி வேட்பாளர்கள் வன்னியில் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஒக் . 17
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வன்னி மாவட்ட வேட்பாளர் அறிமுக கூட்டம் வவுனியாவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது.

கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர். (ச-10)





# வெள்ளைப் பிரம்பு விழிப்புணர்வு

கொழும்பு, ஒக் . 17
சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டுப் பொதுமக்களிடையே வெள்ளைப் பிரம்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக 'வெள்ளைப் பிரம்புக்கு மதிப்பளிப்போம் பார்வையற்றோருக்குக் கரம் கொடுப்போம்' எனும் தலைப்பிலான துண்டுப்பிரசுரம் ஒன்றை மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையமான கருவி நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது. (ச-66)

# வடக்கிலிருந்து பெண் பிரதிநிதி இம்முறை கட்டாயம் தேவை

யாழ்ப்பாணம், ஒக். 17
வடமாகாணத்திலிருந்து இம்முறை பெண் பிரதிநிதி ஒருவர் நாடாளுமன்றம் செல்லவேண்டியது காலத்தின் கட்டாயம் என தமிழ் மக்கள் கூட்டணியின் பெண் வேட்பாளர் திருமதி மிதிலைச்செல்வி ஸ்ரீ பத்மநாதன் வேண்டுகோள் விடுத்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாடாளுமன்றத்தில் பெண் பிரதிநிதித்துவம் குறைவடைந்து செல்கின்றது. கடந்த தேர்தலில் வடக்கு- கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த எந்த ஒரு பெண் வேட்பாளரும் வெற்றியடையவில்லை. வடக்கு - கிழக்கு போரால் பாதிக்கப்பட்ட பிரதேசம். பெண்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலையில் அவர்களுக்குக் குரல் கொடுப்பதற்கு பெண் பிரதிநிதி ஒருவர் நாடாளுமன்றத்தில் இல்லை.

தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரை ஆளுமைமிக்க பெண்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவது அருகி வரும் நிலை காணப்படுகிறது. திறமையான பெண்களை நிறுத்தினால் நாடாளுமன்றம் சென்று விடுவார்கள் என்பதால், அதே கட்சியில் போட்டியிடும் ஆண் வேட்பாளர்களுக்கு பாதகமாக அமைந்து விடும் எனச் சிந்திக்கிறார்கள்.

அவ்வாறான மனநிலையில் இருந்து கட்சிகள் மாறவேண்டும். பெண்களுக்கு சந்தர்ப்பம் வழங்கவேண்டும். தகுதியான திறமையான பெண்கள் வேட்பாளராக நிறுத்தப்படவேண்டும். மக்கள் அவர்களுக்கு ஆணை வழங்குவார்கள்.

ஆகவே வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் சார்ந்து பெண் பிரதிநிதி ஒருவரை நாடாளுமன்றம் அனுப்புவதற்குப் பெண்கள் முன்வருவதோடு ஆண்களும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என்றார். (ஒ-27)



சண்டிலிப்பாய்ப் பிரதேச கலாசாரப் பிரிவு நடத்திய 'வாசித்து இன்புறுவோம்' எனும் தொனிப்பொருளிலான மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்.மானிப்பாய் சத்தியசாயி பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவிகளிடம் ஆசிரியர்கள் துர்நடத்தையில் ஈடுபடவில்லை

## பெற்றோர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக் 17

யாழ்ப்பாணம் - கோண்டாவில் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் இரு ஆசிரியர்கள் மாணவிகளுடன் முறையற்ற விதத்தில் நடந்துள்ளனர் என்று ஊடகங்களில் வெளிவந்த செய்திகளும், அது தொடர்பான குற்றச்சாட்டுகளும் தவறானவை என்று அந்தப் பாடாசலையில் கல்விகற்றும் மாணவர், மாணவிகளின் பெற்றோர் என்று தம்டை அடையாளப்படுத்தியவர்கள் தெரிவித்துள்ளனர்.

செய்திகளில் குறிப்பிட்டுள்ளதைப் போன்று மாணவிகளை ஆசிரியர்கள் தவறான முறையில் தொடவோ, அல்லது துர்நடத்தையில் ஈடுபடவோ இல்லை. இவ்வாறான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி பெற்றோரால் வலயக் கல்விப் பணிமனைக்கு எந்தவொரு கடிதமும் அனுப்பப்படவில்லை என்றும் பெற்றோர் கூறியுள்ளனர்.

வழக்கமாக இடம்பெறும் சில ஒழுக்காற்று நடவடிக்கைகளை, பாடசாலைக்கு, அபகீர்த்தியை ஏற்படுத்தும் முகமாக மிகைப்படுத்தி செய்தி பரப்பப்பட்டுள்ளது என்றும் பெற்றோர் தெரிவித்துள்ளனர். இது தொடர்பான தெளிவுபடுத்தல் கடிதமொன்றில் ஒப்பமிட்[illegible] அவர்கள் ஊடகங்களுக்கு வழங்கியுள்ளனர். (ச)

### ஈஸ்டர்...

இது தொடர்பில் உதய கம்மன்பில நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

'உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் இதுவரை வெளியிடப்படாத இரு ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை ஏழு நாட்களுக்குள் வெளியிடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் அவற்றை நான் வெளியிடுவேன் என கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் அறிவித்திருந்தேன்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் விஜித ஹேரத், என்னிடம் உள்ள அறிக்கைகளை ஒப்படைப்பதற்கு மூன்று நாட்கள் அவகாசம் வழங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், எனக்கு அறிக்கைகள் கிடைக்கப்பெற்ற விதம் பற்றியும் விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நான் நிலவைக் காட்டுகின்றேன், எனவே, நிலவைப் பாருங்கள், மாறாக என் விரல்களை உற்றுநோக்க வேண்டாம் என அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கின்றேன். என்னைப் பற்றி விசாரிப்பதற்கு முன்னர் அறிக்கைகளை வெளியிடுவதற்கு அரசாங்கம் ஏன் தயங்குகின்றது? என்பதை அமைச்சர் விஜித ஹேரத் வெளிப்படுத்தவேண்டும்.

தமது கைகளுக்கு அறிக்கை கிடைத்த கையோடு அவற்றை பகிரங்கப்படுத்துவோம் என்ற உத்தரவாதத்தை ஜனாதிபதி மற்றும் அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோர் உரிய வகையில் வழங்கினால் மட்டுமே அவை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படும். அவ்வாறு இல்லையேல் கையளிக்கமாட்டேன்.

அரசாங்கம் அறிக்கைகளை வெளியிடாவிட்டால் நான் முன்கூட்டியே அறிவித்ததுபோல 7 நாட்களுக்குள் அறிக்கைகளை பகிரங்கப்படுத்துவேன். அச்சுறுத்தல்கள்மூலம் என்னைத் தடுக்க முடியாது. பேய்க்கு பயமெனில் சுடுகாட்டில் வீடு கட்டி வசிப்போமா என்ன? மக்களின் தகவல் அறியும் உரிமைக்காக நாம் என்றும் முன்நின்று செயற்படுவோம்.

இரு அறிக்கைகளையும் வெளியிடுவதற்கு முன்னர் அரச இரகசிய சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் என்னைக் கைது செய்வதற்கு உள்ள இயலுமை பற்றி அரசாங்க மேல் மட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-44)

### சிவராம்...

20 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்றது. அது சம்பந்தமாக சிலர் கைது செய்யப்பட்டனர். உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று அந்த வழக்கிலிருந்து அவர்கள் முழுமையாக விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அதனுடைய அர்த்தம் இனிமேல் அந்த வழக்கை விசாரிக்க முடியாது என்பதாகும்.

நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்தபோதுகூட என்னிடம் விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அந்தக் கொலைக்கும் புளொட் அமைப்புக்கும் எதுவிதத் தொடர்பும் இல்லை என்பதும், வேறு நபர்களே அந்த கொலையோடு சம்பந்தப்பட்டவர் என்பதும் விசாரணையில் ஈடுபட்ட பொலிஸாருக்கு மிகத் தெளிவாக தெரியும். அது அரசாங்கத்துக்கும் தெரியும். இப்போது அதுதொடர்பில் தகவல்கள் வெளிவந்திருப்பது அரசியல் நோக்கம் கொண்டதாகவே கருதுகின்றேன்.

அரசாங்கத்தினரும் (தேசிய மக்கள் சக்தி) வடக்குக் கிழக்கிலே போட்டியிடுகின்றார்கள். தங்கள் அரசியல் நலன்களுக்காகவே இந்த வழக்குகள் தொடர்பில் பேசியிருக்கிறார்கள். அதுபோல ஏனைய தமிழ்க் கட்சிகளும் தங்கள் அரசியல் நோக்கத்துக்காவே தராகி சிவராமையும் எங்களையும் தொடர்புபடுத்தி பேசிக் கொண்டிருக்கின்றன. உண்மையில், தராகி சிவராம் கொலை வழக்கினை மீள விசாரிப்பது தொடர்பில் அரசாங்கம் தெரிவித்த கருத்தை நான் ஒரு விடயமாகவே கருதவில்லை.

கடந்த காலங்களிலே எத்தனையோ கொலைகள் இடம்பெற்றிருக்கின்றன. இது சம்பந்தமாக எதுவிதமான நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை. தராகிசிவராம் கொலை வழக்குத்தான் மீள விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளதாக சொல்லப்படுகிறது. ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு மக்கள் மத்தியில் ஆதரவு பெருகும் நிலையில், அதனைப் பார்த்து அரசாங்கம் உட்பட அனைவருமே பயமடைந்து இந்தக் கருத்தைச் சொல்லி வருகிறார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன் - என்றார். (அ-ம-26)

### விவசாயத்தை...

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள கிராமிய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் ஆய்வு செய்த ஜனாதிபதி, அந்தத் திட்டங்கள் ஓரளவு வெற்றியடைந்தாலும் அதன் மூலம் கிராமப்புற வறுமை எந்த அளவுக்குத் தீர்க்கப்பட்டுள்ளது என்ற கேள்வியுள்ளதாகவும் தெரிவித்தார். எனவே எதிர்காலத்தில் கிராமிய வறுமையை ஒழிப்பதே கிராமிய அபிவிருத்தித் திட்டங்களின் பிரதான இலக்காக இருக்க வேண்டுமென ஜனாதிபதி அநுரகுமார சுட்டிக்காட்டினார்.

வறுமை என்பது பணப் பற்றாக்குறை மாத்திரமன்றி, சமூகத்தில் ஒரு பிரிவினரை ஓரங்கட்டுவது மற்றும் ஒரு சமூகப் பேரழிவு என்றும் வலியுறுத்திய ஜனாதிபதி அநுரகுமார, கிராமப்புற வறுமையை ஒழிப்பதற்கான இலகுமயப்பட்ட செயற்றிட்டத்தின் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார். (அ-ம)

### திஸ்ஸ...

சட்டவிரோத முறையில் அமைக்கப்பட்டுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் நிலையில், நேற்று ஆரம்பித்த இந்தப் போராட்டம் இன்றும் தொடரவுள்ளது. (அ-ம-20)

### திருடப்பட்ட...

கடந்த பத்தாம் திகதி சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெருடாவில் பகுதியில் உள்ள வீடொன்றில் பகல் வேளையில் நுழைந்த திருடர்கள் வீட்டில் இருந்த 16 பவுண் நகைகள் மற்றும் தொலைபேசி ஆகியவற்றைத் திருடிச் சென்றிருந்தனர். இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸாரிடம் முறையிடப்பட்டதுடன், கண்காணிப்புக் கமராக்களின் பதிவுகளும் பொலிஸாரிடம் வழங்கப்பட்டன.

விரைந்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகநபர்களாக ஐந்து பேரைக் கைது செய்துள்ளதுடன், அவர்களிடம் இருந்து திருடப்பட்ட நகைகள் மீட்கப்பட்டுள்ளன. கைதான சந்தேகநபர்களில் இருவர் பெண்கள் என்பதுடன், இருவர் திருடப்பட்ட நகைகளைக் கொள்வனவு செய்த வர்த்தகர்களாவார்கள். மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-20-26-131)

### அற்றோனித்...

கனடாவைச் சேர்ந்த நபரொருவர், மானிப்பாயில் உள்ள தனது ஆதனங்கள் சிலவற்றுக்கு அற்றோனித்தத்துவ அதிகாரத்தை வழங்கியிருந்த நிலையில், அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, அற்றோனித்தத்துவ அதிகாரங்கள் வழங்கப்படாத சில ஆதனங்களும் மோசடியாக உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பில், யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான குழுவினரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகநபர்களாக அரச ஊழியர் ஒருவர் உட்பட இருவரைக் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும், அந்த உறுதியின் மீதான தமது பொறுப்புகளைத் துறந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதையடுத்து அவர்கள் இருவருக்கும் நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் உள்ளவர்களின் காணிகள், வீடுகள் மற்றும் ஆதனங்கள் தொடர்பில் வழங்கப்படும் அற்றோனித்தத்துவ அதிகாரங்களைப் பயன்படுத்தி மோசடியான முறையில் காணி உரிமை மாற்றங்கள், கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுவது அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது என்றும், இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (அ-ம-26)

### போலிக்...

ஜேர்மனியில் வசிப்பவர் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான குழுவினரிடம் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகநபர்களாக இருவரைக் கைதுசெய்துள்ளனர். அவர்களில் ஒருவர், பல்கலைக்கழக மொன்றின் கல்விசாரா ஊழியராவார்.

இந்த இருவரும் காணி மீதான தமது பொறுப்புகளைத் துறந்துள்ளனர். அவர்களுக்கு நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் ஏற்கனவே மேலும் இருவர் சந்தேகநபர்களாக கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### யாழ். தேர்தல்...

களின் பாதுகாப்பு, தேர்தல் விதிகள் தொடர்பான பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், பொலிஸாரால் உரிய அறிவுறுத்தல்கள் தேர்தலில் போட்டியிடும் தரப்புகளுக்கு வழங்கப்பட்டன. அத்துடன், வேட்பாளர்களின் பாதுகாப்புத் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

இலகுவான முகாமைத்துவம் மற்றும் இலகுவான ஒருங்கிணைப்பு நிகழ்வுகளுக்காக 44 தரப்புகளையும் சேர்ந்த பிரதிநிதிகள், பொலிஸார் மற்றும் தேர்தல் அதிகாரிகள் ஆகியோரை உள்ளடக்கி 51பேரைக்கொண்ட குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

### விபத்தில்...

யைச் சேர்ந்த துரைச்சாமி கணபதி (வயது- 74) என்ற முதியவரே உயிரிழந்தவராவார்.

கடந்த இரண்டாம் திகதி மன்னார் வீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது அந்த முதியவரை மோட்டார்சைக்கிள் ஒன்று மோதியுள்ளது. படுகாயமடைந்த அந்த முதியவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பார்' உரிமங்களை ஜே.வி.பி. பெற்றதா?

## பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கீதநாத் காசிலிங்கம் கேள்வி



**யாழ்ப்பாணம், ஒக். 17**
**கடந்த ஆட்சி காலத்தில் ஜே.வி.பியினரும் மதுபான சாலைகளை பெற்றார்களோ என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் யாழ்ப்பாண மாவட்ட வேட்பாளர் கீதநாத் காசிலிங்கம் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சில வாரங்களுக்கு முன்னர் ஊடக சந்திப்பை நடத்திய தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தரான வசந்த சமரசிங்க மதுபானசாலை உரிமம் பெற்றவர்களின் பெயர் விவரங்களை வெளியிடப்போவதாகத் தெரிவித்தார். ஆனால் மூன்று வாரங்கள் கடந்தும் இதுவரை அந்தப் பட்டியல் வெளியிடப்படவில்லை. இதன் மூலம் ஜே.வி.பி.யினரும் மதுபான சாலை அனுமதிப் பத்திரங்களை பெற்றார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.
நான் மஹிந்த ராஜபக்ஷவுடன் 15 வருடங்களாக இணைந்து வேலை செய்கிறேன். இதுவரை மதுபான சாலை அனுமதிப்பத்திரமோ, மதுபானபோத்தலையோ நானும் பெற்றதில்லை, எவருக்கும் பெற்றுக்கொடுத்ததில்லை.
13ஆவது திருத்தம் தொடர்பில் பொதுஜன பெரமுனவும், நாமல் ராஜபக்சவும் வெளியிடும் கருத்துக்களுக்கு மாறான நிலைப்பாடு என்னுடையது. சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் தமிழருக்கு தீர்வு வழங்குவதற்கு எதிராக ரணில் விக்கிரமசிங்கவும், அநுரகுமார திஸாநாயக்கவும் செயற்பட்டனர். அவர்கள் தற்போது தமது நிலைப்பாட்டை மாற்றும்போது பொதுஜன பெரமுனவும் தமது நிலைப்பாட்டை ஒரு காலத்தில் மாற்றும் என்று நான் நம்புகின்றேன்.
ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தபோவதாக தெரிவித்த அநுரகுமார திஸாநாயக்க ஆட்சிக்கு வந்த பின்னர் தனது உண்மையான நிலைப்பாட்டை காட்டியுள்ளார். பல்வேறு பொய்களை சொல்லி ஆட்சிக்கு வந்துள்ள ஜே.வி.பி.யின் உண்மை முகம் இன்று வெளிவந்துள்ளது - என்றார். (ம-26-20)

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஒக். 17
யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பவள விழா மண்டபத்தில் கல்லூரி முதல்வர்வ. நந்தீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வுக்கு யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சு. ஜீவசுதன் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார். (ச-63)


**விற்பனைப் பிரதிநிதிகள் தேவை**
யாழ்ப்பாணம் கோண்டாவிலில் இயங்கிவரும் எமது FAP LANKA (PVT)LTD நிறுவனத்திற்கு தகுதி வாய்ந்த விற்பனைப் பிரதிநிதிகளை எதிர்பார்க்கிறோம்.
- வயது 19 - 45
- கணினி அறிவு
- சாரதி அனுமதிப்பத்திரம்


தொடர்புகளுக்கு:- 076 200 1700
(CS/58456) J-1

**வீடு வாடகைக்குத் தேவை**
ஆறுகால் மடத்திற்கும் பண்டத் தரிப்பிற்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் தேர்தல் காரியாலயம் நடத்துவதற்கு தண்ணீர், மலசலகூடம், மின்விசிறி போன்ற வசதிகளுடன் கூடிய வீடு வீதியோரமாக வாடகைக்குத் தேவை.
077 858 8624
(CS/58486) J-1

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2026ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
V2 Travels
0768226244


# மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 10 . 1951



மறைவு 16 . 10 . 2024

## செல்லையா நைல்ஸ் ஞானரட்ணம்

மாகியப்பிட்டி, சூரியோதய சனசமூக நிலைய வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நைல்ஸ் ஞானரட்ணம் அவர்கள் நேற்று (16.10.2024) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னையா - அழகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், குளோரி இன்பராணி (சந்திரா நைல்ஸ் ஞானரட்ணம்) அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான புஸ்பராணி, செல்வரட்ணம், கருணாரட்ணம் மற்றும் குணரட்ணம், ஜெயரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (18.10.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.00 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக அளவெட்டி அமெரிக்கன் சிலோன் மிஷன் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சூரியோதய சனசமூக நிலைய வீதி,**
**மாகியப்பிட்டி,**
**சண்டிலிப்பாய்.**

(CS/1634) J-1

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 941 2570**

# டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.17
யாழ். மாநகர பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினரால், கடந்த இரு நாள்களாக டெங்கு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது ஆசிரியர்கள், மாணவர்களுக்கு டெங்கு நோய் மற்றும் அதனைக் கட்டுப்படுத்தல் தொடர்பாக சுகாதாரப் பிரிவினரால் எடுத்துக்கூறப்பட்டது. இதேசமயம் மாநகர மருத்துவ அதிகாரி கலாநிதி சருவரூபன் தலைமையில் இடம்பெற்ற மூன்று நாள் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் போது மாநகரப் பிரதேசத்திலுள்ள சகல அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், ஆலயங்கள், வர்த்தக நிலையங்கள் என்பவை பரிசோதிக்கப்பட்டன. (ச-25, 17)

# ஆடுகள் திருட்டு

மட்டுவில் இந்திராபுரம் பகுதியில் மேய்ச்சலுக்காகக் கட்டப்பட்டிருந்த இரண்டு ஆடுகள் கடந்த வாரம் திருடப்பட்டுள்ளன என்று சாவகச்சேரி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
வழமைபோன்று அருகில் உள்ள காணியொன்றினுள் மேய்ச்சலுக்கு கட்டப்பட்டிருந்த நிலையில் ஆடுகள் திருடப்பட்டுள் ளன. இந்த இரண்டு ஆடுகளும் 80 ஆயிரம் ரூபா பெறுமதியானவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-22,131)

## கசிப்புக்குகை...

மதுவரித் திணைக்களத்தினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே இந்த கசிப்புக்குகை முற்றுகையிடப்பட்டதுடன், 800 லீற்றர் கோடா மீட்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-100)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.